103122

5/10/2017.

சுருக்கம்

பள்ளிக்கல்வி – அரசுத் தேர்வுகள் இயக்ககம் – மேல்நிலை முதலாம் ஆண்டு பொதுத் தேர்வு – தனித் தேர்வர்களை தேர்விற்கு அனுமதி வழங்குதல் – ஆணை வெளியிடப்படுகிறது.

---

பள்ளிக்கல்வி(ஜிஇ.1)த் துறை

அரசாணை (1டி) எண்.573

நாள்: 03.10.2017.
திருவள்ளுவர் ஆண்டு 2048
ஹேவிளம்பி வருடம், புரட்டாசி 17,

படிக்கப்பட்டவை:-

1. அரசாணை (நிலை) எண்.2575, கல்வி துறை, நாள். 01.12.1980
2. அரசாணை (நிலை) எண்.1171 கல்வி (வி1) துறை, நாள். 27.11.1992
3. அரசாணை (நிலை) எண்.100, கல்வி (ஜிஇ1) துறை, நாள். 22.05.2017.
4. அரசுத் தேர்வுகள் இயக்குநரின் கடிதம் கடித ந.க.எண். 104944/எச்2/2017, நாள். 09.06.2017.

-----

ஆணை:-

மேலே ஒன்றாவதாகப் படிக்கப்பட்ட அரசாணையில், எஸ்.எஸ்.எல்.சி பொதுத் தேர்வில் அனைத்துப் பாடத் தேர்வுகளிலும் குறைந்த பட்சம் 35% மதிப்பெண்கள் பெற்று, 18 வயது நிரம்பியவர்கள், மேல்நிலைப் பொதுத் தேர்வுகளுக்கு, செய்முறை தேவையில்லாத கலைப் பாடங்களை தேர்வு செய்து, தனிப்பட்ட முறையில் நேரடித் தனித்தேர்வர்களாக தேர்வெழுதிட ஆணையிடப்பட்டது.

2. இதனை தொடர்ந்து, மேலே இரண்டாவதாகப் படிக்கப்பட்ட அரசாணையில், இடைநிலைக் கல்வியில் தேர்ச்சி பெற்று, முழு இரண்டு ஆண்டுகள் இடைவெளிக்கு பின்னரே மேல்நிலைப் பொதுத் தேர்வுகளுக்கு விண்ணப்பித்து தேர்வெழுதிட இயலும் என்றும், மேல்நிலைப் பொதுத் தேர்வெழுதும் தேர்வர்களது குறைந்தபட்ச வயது நிர்ணயம் 16 $^{1/2}$ வயது என குறைக்கப்பட்டு ஆணை வெளியிடப்பட்டது.

3. இதனை தொடர்ந்து, மேலே மூன்றாவதாகப் படிக்கப்பட்ட அரசாணையில், மேல்நிலை முதலாம் ஆண்டு பயிலும் மாணவர்களுக்கும் பொதுத் தேர்வு நடத்திட அரசாணை பிறப்பிக்கப்பட்டது. எனவே, மேல்நிலை முதலாமாண்டு (+1) தேர்வினை தனிப்பட்ட முறையில் நேரடித் தனித் தேர்வர்களாக பொதுத் தேர்வெழுதும் தேர்வர்கள் பின்பற்றப்பட வேண்டிய நடைமுறைகள் குறித்த செயற்குறிப்பின் மீது அரசின் ஆணையினை வழங்குமாறு பார்வை 4–ல் காணும் கடிதத்தில் அரசுத் தேர்வுகள் இயக்குநர் கேட்டுக்கொண்டுள்ளார்.

4. அரசுத் தேர்வுகள் இயக்குநரின் செயற்குறிப்பு அரசால் ஆய்வு செய்யப்பட்டது. அதனடிப்படையில், கீழ்க்காணும் நடைமுறைகளுக்கு அனுமதியளித்து அரசு ஆணையிடுகிறது :–

I. மார்ச் 2018 முதல் மேல்நிலை முதலாம் ஆண்டு பொதுத் தேர்வுகள், அனைத்து பள்ளி மாணாக்கர்களுக்கும் நடத்தப்பட உள்ளதால், இதுநாள் வரை தனிப்பட்ட முறையில் நேரடித் தனித்தேர்வர்களாக மேல்நிலைப் பொதுத் தேர்வெழுதும் தேர்வர்களும்,

மார்ச் 2018 முதல் மேல்நிலை முதலாம் ஆண்டு பொதுத் தேர்வினை எழுதிய பின்னரே மேல்நிலை இரண்டாமாண்டு பொதுத் தேர்வுகளை எழுதிட வேண்டும்.

II. மேல்நிலை முதலாமாண்டு பொதுத் தேர்வினை தனிப்பட்ட முறையில் நேரடித் தேர்வர்களாக எழுதிட விரும்பும் தேர்வர்கள் கீழ்க்காணும் தகுதிகளை பெற்றவராக இருத்தல் வேண்டும் :-

(அ) தமிழக அரசால் நடத்தப்படும் இடைநிலைப் பொதுத் தேர்வுகளில் தேர்ச்சி அல்லது அதற்கு இணையான கல்வித் தகுதி பெற்றவராக இருத்தல் வேண்டும்.

(ஆ) மார்ச்/ஏப்ரல் பருவ பொதுத் தேர்வெழுதும் தனித்தேர்வர்கள் ஏப்ரல் முதல் நாளிலும், செப்டம்பர் / அக்டோபர் பருவத் தேர்வெழுத விரும்பும் தனித்தேர்வர்கள் அக்டோபர் முதல் நாளில் குறைந்தப் பட்சம் $15^{1/2}$ வயது நிரம்பியவராக இருத்தல் வேண்டும்.

(இ) இடைநிலைக் கல்வியில் முழுமையாக தேர்ச்சி பெற்ற பின் ஓராண்டு கால இடைவெளி இருத்தல் வேண்டும்.

(ஈ) மேல்நிலைக் கல்வியில் செய்முறை தேர்வு இல்லாத பாடத்தொகுப்பை மட்டுமே தேர்வு செய்து தேர்வெழுத வேண்டும்.

(உ) அரசாணை (நிலை) எண்.100 பள்ளிக் கல்வி (ஜிஇ(1))த் துறை, நாள். 22.05.2017-ல் பத்தி எண்.12-ல் குறிப்பிடப்பட்டுள்ள ஏனைய விதிகள் (பத்தி 12-(எ) தவிர்த்து), மேல்நிலை முதலாம் ஆண்டு பொதுத் தேர்வினை எழுதும் தனித்தேர்வர்களுக்கும் பொருந்தும்.

5. மேற்காண் நடைமுறைகளை பின்பற்றி, மார்ச் 2018-முதல் மேல்நிலை முதலாம் ஆண்டு பொதுத் தேர்விற்கு தனித்தேர்வர்களை அனுமதித்து தேர்வு நடத்திட அரசுத் தேர்வுகள் இயக்குநர் அறிவுறுத்தப்படுகிறார்.

(ஆளுநரின் ஆணைப்படி)

பிரதீப் யாதவ்
அரசு முதன்மைச் செயலாளர்.

பெறுநர்
அரசுத் தேர்வுகள் இயக்குநர், சென்னை-6.
பள்ளிக்கல்வி இயக்குநர், சென்னை-6.
தொடக்கக்கல்வி இயக்குநர், சென்னை-6.
மெட்ரிக்குலேஷன் பள்ளிகள் இயக்குநர், சென்னை-6.

நகல் :
பள்ளிக்கல்வித் துறை அமைச்சரின் சிறப்பு நேர்முக உதவியாளர்,
சென்னை-9.

// ஆணைப்படி அனுப்பப்படுகிறது //

3/10/17
பிரிவு அலுவலர்.